செய்தி வெளியீடு எண்:**656** நாள்:**30.08.2021**

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>“தமிழ்நாட்டிற்கு உர ஒதுக்கீட்டின்படி உரிய நேரத்தில் உரங்களை வழங்குமாறு ” வலியுறுத்தி ஒன்றிய அரசின் மாண்புமிகு இரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கடிதம்</u>

மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆர். கே. பன்னீர் செல்வம் அவர்கள் ஒன்றிய அரசின் இரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் அவர்களுக்கு 26.08.2021 அன்று எழுதியுள்ள கடிதத்தில் **உரிய நேரத்தில் யூரியா மற்றும் டிஏபி உரங்களை உர வழங்கல் திட்டத்தின்படி முழுமையாக வழங்கவும் மற்றும் இறக்குமதி செய்யப்படும் உரங்களை தமிழ்நாட்டில் உள்ள துறைமுகங்களிலும் மற்றும்**

**புதுச்சேரி மாநிலத்திலுள்ள துறைமுகத்திலும்** வந்தடைய ஏற்பாடு செய்து தரும்படி கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவ மழை காலத்தில் நல்ல மழைப்பொழிவு பதிவானதால், **உரிய நேரத்தில் மேட்டூர் அணை பாசனத்திற்காக திறக்கப்பட்டதால், குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம் செயல்படுத்தியதன் காரணமாக நடப்பாண்டில்** டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி பரப்பு **நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 3.50 இலட்சம் ஏக்கர் பரப்பளவைக் காட்டிலும்** அதிகமாக **4.90 இலட்சம் ஏக்கர் பரப்பளவில்** சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. **கடந்த 46 ஆண்டுகளில் இல்லாத அளவில் ஒரு மைல் கல்லாக அமைந்துள்ளது.**

மேலும், தென்தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவ மழை நல்லமுறையில் பெறப்பெற்றதால் அனைத்து அணைகளும் நிரம்பி, பல ஆண்டுகளுக்கு பின்னர் பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டதன் காரணமாக மாநிலத்தில் கார் / குறுவை / சொர்ணவாரி பருவங்களில் நிகழாண்டில் நெல் பயிரில் 10.00 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு மேலாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்தாண்டைக் காட்டிலும் 2.72 இலட்சம் ஏக்கரில் கூடுதலாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நாளது வரை அனைத்துப் பயிர்களின் சாகுபடி 25.40 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கும் மேலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் காரணமாக யூரியா மற்றும் டிஏபி உரங்களின் தேவைகள் அதிகரித்துள்ளன.

தமிழ்நாட்டிற்கு ஏப்ரல் 2021 முதல் ஆகஸ்ட் 2021 வரை யூரியா உரம் 3.838 இலட்சம் மெ. டன் ஒதுக்கீடு ஒன்றிய அரசு செய்துள்ளபோதிலும், யூரியா 2.56 இலட்சம் மெ.டன் மட்டுமே உர நிறுவனங்களால் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளன. உரம் வழங்கியதில் 1.278 இலட்சம் மெ. டன் குறைவு காணப்பட்டது. மேலும், இதே மாதங்களில் டிஏபி உரம் 1.20 இலட்சம் மெ. டன் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், 87,000 மெ.டன் மட்டுமே தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. டிஏபி உரம் வழங்குதலில் 33,000 மெ. டன் குறைவு நிலவியது.

தமிழ்நாட்டில் 25.40 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ள அனைத்து பயிர்களுக்கும் அடி உரம் மற்றும் மேலுரமிட யூரியா மற்றும் டிஏபி உரங்களின்

தேவை அதிகரித்துள்ளது. ஆகையால், உரம் வழங்குவதில் குறைவு நிலவினால் பயிர் உற்பத்தி மற்றும் விவசாயிகளின் வருமானம் பெருமளவில் குறைய வாய்ப்புள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, உரிய நேரத்தில் யூரியா மற்றும் டிஏபி உரங்களை உர வழங்கல் திட்டத்தின்படி முழுமையாக வழங்கவும் மற்றும் இறக்குமதி செய்யப்படும் உரங்களை தமிழ்நாட்டில் உள்ள துறைமுகங்களிலும் மற்றும் புதுச்சேரி மாநிலத்திலுள்ள துறைமுகத்திலும் வந்தடைய ஏற்பாடு செய்து தரும்படி தமிழ்நாடு அரசின் மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9